23.03.2026

OS. No. 66 / 2019

**PW.1 – பாத்திமா**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–**

வா.சா.ஆ.1 ஆவணம் தயாரித்த முத்திரைத்தாள் எந்த தேதியில் வாங்கப்பட்டுள்ளது என்றால் 19.04.2012-இல் வாங்கப்பட்டுள்ளது. 2013-ஆம் ஆண்டு பிரதிவாதி என்னிடம் பணம் வாங்கும்பொழுது வா.சா.ஆ.1 ஒப்பந்தம் போடப்பட்டது. பழைய பத்திரத்தில் ஏன் ஒப்பந்தம் எழுதினார் என்று நான் தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கையெழுத்திட்ட தேதியில் 1-ஆம் பிரதிவாதி வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரியல்ல, இருவரும் சேர்ந்துதான் வாங்கினார்கள். பிராது பத்தி ஐந்தில் சொல்லியுள்ளபடி பிரதிவாதி என்னிடம் நான் எந்த தேதியில் எவ்வாறு பணத்தை திருப்பி கேட்டேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஏற்கனவே கடன் கொடுத்து அந்த கடனையே திருப்பித்தராத சூழ்நிலையில் நான் எவ்வாறு 2016-ஆம் ஆண்டு கூடுதல் தொகை கொடுத்தேன் என்றால், அவர் புரோநோட் எழுதிக்கொடுத்ததால் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 புரோநோட் தான் பத்துலட்சம் வாங்கியதற்கான அத்தாட்சி என்றால் சரிதான். அதை யார் முன்னிலையில் எழுதிக்கொடுத்தார் என்றால், எங்கள் வீட்டில் உள்ள என் அப்பா, அம்மா, என் தங்கை பர்வீன், தம்பி சையது மாலிக் மற்றும் புரோநோட்டில் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் இருந்தார்கள். பத்துலட்சம் ரூபாய்க்கு நான் புரோநோட்டை எழுதி வாங்கிய பிறகு, எதற்காக ஐந்து லட்சம் ரூபாய்க்கு எழுதி வாங்கிய கடன் ஒப்பந்த ../

பத்திரத்தை திருப்பித்தராமல் நானே வைத்துக்கொண்டேன் என்றால், பிரதிவாதி கேட்கவில்லை, நானும் திருப்பிக்கொடுக்கவில்லை. வா.சா.ஆ.2 புரோநோட்டை யார் எழுதியது என்றால், 1-ஆம் பிரதிவாதி சொல்ல சொல்ல என் தகப்பனார் எழுதினார். வா.சா.ஆ.1 மற்றும் 2 எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் தேதிகளில் 1-ஆம் பிரதிவாதி வெளிநாட்டில் இருந்தார் என்றாலும், அவர் அந்த தேதியில் எழுதிக்கொடுக்க வாய்ப்பே இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளை எனக்கு பத்து பதினைந்து வருடங்களாக தெரியும். பிரதிவாதிகள் எனக்கு நன்றாக தெரியும் என்பதால், அவர்கள் எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு ரூபாய் பத்து லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு பணம் எவ்வாறு வந்தது என்று என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் வெளிநாட்டில் வேலை செய்கிறார். அதன்மூலமாக நான் கடன் கொடுத்தேன். எனக்கு வட்டிக்கு கடன் கொடுக்கும் பழக்கம் இல்லை. பிரதிவாதிதான் வட்டி கொடுப்பதாக சொல்லி பத்திரம் எழுதிக்கொடுத்தார். நான் ஏலச்சீட்டை நடத்துகிறேன் என்றாலும், அதில் வரும் தொகையை வைத்து வட்டிக்கு பணம் விடுகிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள்தான் சீட்டு நடத்தி வருகிறார்கள். பிரதிவாதிக்கு நான் எந்தவொரு தொகையும் கடன் கொடுக்கவில்லை என்றாலும், பொய்யாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 1-ஆம் பிரதிவாதி வெளிநாட்டில் வேலை செய்து நல்ல சம்பாதித்து வந்தார் என்றாலும், நான் கடன் கொடுத்து எழுதி வாங்கியதாக சொல்லும் தேதிகளில் அவர் இந்தியாவிலேயே இல்லை என்றாலும், அதனால் மோசடியாக ஆவணம் ../

தயாரித்து இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரிலுள்ள அசல் கிரைய ஆவணத்தை என்னிடம் கொடுத்து அந்த நிலத்தை விற்றுக்கொடுக்க சொன்னார்கள் என்றாலும், நான்தான் அதை தவறாக இந்த வழக்கில் தாக்கல் செய்வதற்கு பயன்படுத்திக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1, வா.சா.ஆ. 2 ஆவணங்களை நான் மோசடியாக தயாரித்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, வா.சா.ஆ. 2 ஆவணங்களில் உள்ள கையெழுத்து பிரதிவாதிகளுடைய கையெழுத்து இல்லை என்றாலும், அந்த கையெழுத்தை நாங்களே போட்டு அந்த ஆவணத்தை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு பத்திரம் எழுதி பழக்கம் உள்ளதால் வா.சா.ஆ.1, வா.சா.ஆ. 2 ஆவணங்களை என் தகப்பனாரின் உதவியோடு நான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்தவொரு தேதியிலும் என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும், வா.சா.ஆ.1, வா.சா.ஆ. 2 ஆவணங்களில் எந்த தேதியிலும் கையெழுத்து போடவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் எந்தவொரு பணத்தையும் திருப்பித்தரவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.03.23 07:28:11 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.